# நல்லூர் பிரதேச சபை

# யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 04 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 19 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நல்லூர் பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | வருமானம் | | சொத்துக்கள் | | பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 11இ795 | 02 | 27இ216இ973 | 02 | 25இ754இ931 |
| குறைத்துக் கூறல் | | | 02 - | 132இ098 | - | - |

ஆ.2009ம் ஆண்டில் உள்;ராட்சி அமைச்சிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட இரண்டு வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்படாமையால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி கணக்குகளில் குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-------------------------------------------------------

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 57இ672இ920 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

----------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | |
| அத்தியாயம் ஏ பிரிவு 132 | களியாட்ட விடயங்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூபா 1,000 இற்கு அதிகமான செலவினத்தை மேற்கொள்ளும்போது அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென்ற போதிலும் நடைமுறையாண்டில் ரூபா 5இ964 செலவினத்திற்கு அமைச்சரின் முன் அங்கீகாரமில்லாது மேற் கொள்ளப்பட்டது. |
| அத்தியாயம் ஏ பிரிவு 158(1) | ரூபா 5இ936இ558 ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 8,222,926 முற்பணம் செலுத்தத் தவறும் போது செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் ஔை பிரிவு 140 | தவிசாளரினால் தாபன விதிக் கோவைக்கு முரணாக வாடகை வாகனம் 5 நாட்களுக்கு ரூபா 24,796 செலவில் வாடகைக்கு அமர்த்தப்பட்டு சபை நிதியில் செலுத்தப்பட்டுள்ளது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 218இ207 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினமாக ரூபா 7இ990இ541 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

---

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 31இ411இ023 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 15இ260இ579 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3 வருமான நிர்வாகம்

---

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

---

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| --- | --- | --- | --- |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ை.இறைகளும் வரிகளும் | 2இ789 | 2இ662 | 5இ937 |
| ைை.குத்தகை வாடகைகள் | 26இ625 | 28இ149 | - |
| ைைை.அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 2இ580 | 3இ648 | 3 |
| ைஎ.வேறு வருமானங்கள் | 97இ506 | 63இ629 | 118இ237 |

### 2.3.2 வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டிலும் முன்னைய காலங்களிலும் ரூபா 7இ812இ231 பெறுமதியான வருமான நிலுவைகள் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை டிசம்பர் மாதத்திற்கான நீதிமன்றத் தண்டப்பணமும் குற்றப்பணங்களும் ரூபா 3,000 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. மீளாய்வாண்டு இறுதிவரை பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

2006, 2010, 2011, 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளுக்கான நீதிமன்ற தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 122இ385இ282 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதிவரையும் பெற்றுக் கொள்வதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

---

2.4.1 பயன்படுத்தப்படாத பௌதீகச் சொத்து

---

2011ம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,354,000 பெறுமதியான பாதையில்லாத குருந்தன்புலம் காணி 2 வருடங்களாக பயன்பாடின்றி பற்றைகள் நிறைந்த நிலையில் காணப்படுகின்றது.

2.4.2 வருடாந்த இருப்புக் கணிப்பீட்டுச் சபை அறிக்கை

---

வருடாந்த இருப்புக் கணிப்பீட்டு சபை அறிக்கையினை இருப்புப் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்தபோது 13 விடயங்கள் மேலதிகமாக காணப்படுகிறது.

2.5 ஒப்பந்த நிர்வாகம்

---

2.5.1 கைவிடப்பட்ட செயற்திட்டம்

---

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 928இ080 பெறுமதியான 3 வீதி வேலைகள் நிறைவேற்றப்படாத நிலையில் முற்றாகக் கைவிடப்பட்டுள்ளது.

2.5.2 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

---

மீளாய்வாண்டில் சபை நிதியில் நிறைவேற்றப்பட வேண்டிய 23 வேலைத்திட்டங்கள் ரூபா 24இ187இ831 பெறுமதியானவை மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படாது சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 2.6 முகாமைத்துவ பலவீனம்

------------------------------------

மீளாய்வாண்டு செலவினங்களை மேற்கொள்வதற்கு ரூபா 22.2 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புக்கள் மாற்றப்பட்டிருப்பதுடன் மேலும் செலுத்த வேண்டிய சில்லறைக் கடனாளிகள் மீதி ரூபா 25.7 மில்லியனை செலுத்துவதற்கு திரவமீதியான நடைமுறைக் கணக்கின் வங்கி மீதி காசு மீதி ரூபா 8.9 மில்லியனாக காணப்படுவதினால் மீளவும் எதிர்காலத்தில் நிலையான வைப்புக்களை மாற்றவேண்டியிருப்பது சபையின் முகாமைத்துவ பலவீனத்தை வெளிப்படுத்துகின்றது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------

பின்வரும் முறைமைகளில் கட்டுப்பாடுகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

அ. வருமான சேகரிப்பு
ஆ. பாதீடு
இ. முற்பணங்கள்
ஈ. சில்லறைக்கடன் கொடுத்தோர்
உ. வாகனம்
ஊ. நானாவித வைப்புக்கள்